DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No. 116/ 2022**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | ஆறுமுகசாமி (P.w. 9) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12th day of June 2026

( 1, 2 எதிரிகள் ஆஜர் . 3, 4 வது எதிரிகள் ஆஜர் இல்லை எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை –**

நான் தற்போது கம்பாளியில் குடியிருந்து வருகிறேன். நான் மில்லில் வேலை செய்து வருகிறேன். நல்லம்மாள், பொன்னாத்தாள் ஆகியோரை தெரியும், எனது ஊர்க்காரர்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். கார்த்திகைச் செல்வி, கச்சம்மாள் ஆகியோரை தெரியும். நான் தூத்துக்குடியில் வெல்டிங் வேலை பார்த்து வந்ததால் நான் அங்கு இருந்தேன். வழக்கு பற்றி எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

அ.த.கு.வி :–

கடந்த 06.11.2020ம் தேதியன்று நல்லம்மாள் நிலத்தில் எதிரிகள் வேலை செய்வதற்காக அவர்களுக்கு தகவல் கிடைத்தது என்றும் நல்லம்மாள் மகள்கள் பொன்னத்தாளும், சித்ரா ஆகியோர் மதியம் 12.00 மணிக்கு அங்கு சென்றதாகவும், அவர்கள் பின்னால் நல்லம்மாளும் சென்றதாகவும் எதிரிகளிடம் பொன்னத்தாளும் , சித்ராவும் ஏன் எங்கள் இடத்தில் வேலை செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரிகள் மூன்றுபேரும் இருவரையும் பெண் என்றும் பாரம் அசிங்கமாக பேசி கையால் அடித்து வீக்க காயம் ஏற்படுத்தியதாகவும், நல்லம்மாள் அவர்களை சத்தம் போட்டதாகவும், கார்த்திகை செல்வி சித்ராவின் வலது கை மோதிரவிரலை கடித்துள்ளார் என்றும், எதிரிகள் அவர்களை பார்த்து ஒழுங்கா போயிருங்க இல்லாட்டி உங்களை கொன்றுவிடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் காயம்பட்ட பொன்னத்தாளையும், சித்ராவையும் பெரியசாமி திருச்சுழி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்துள்ளதாக கேள்விபட்டதாகவும் இந்நிலையில் 07.11.2020ம் தேதி காலை 7.00 மணியளவில் நல்லம்மாளும், அவரது பேத்தி சந்தியா என்ற சந்தியவள்ளி வீட்டில் இருந்தபோது அவர்கள் அத்து மீறி நுழைந்த முத்துமுருகன், அவர் அம்மா ராக்கு, அவர் அக்கா காத்திகைசெல்வி, கச்சம்மாள் ஆகியோர் அவர்களை தேவிடியா என்னடி நிம்மதியா தூங்குறீங்களா என்று அசிங்கமாக பேசி நான்குபேரும் மாறி மாறி சந்தியா வயிற்றிலும், நெஞ்சிலும் மிதித்தார்கள் என்றும் அப்போது தடுக்க போன நல்லம்மாளை முத்துமுருகன் கம்பால் தலையில் அடித்து ரத்தக்காயத்தை ஏற்படுத்தியதாகவும் அதை நேரில் பார்த்த நானும், மற்றும் சிலர் அவர்களை சத்தம் போட்டோம் என்றும் நல்லம்மாள் மற்றும் சந்தியா ஆகியோர் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு போனார்கள் என்றும்

அங்கு வந்த போலிசாரிடம் நல்லம்மாள் குடும்பத்தாரிடம் ஆலோசித்துவிட்டு புகார் கொடுத்ததாகவும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எ.த.கு.வி –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No. 116/ 2022**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | பொன்னாத்தாள் (P.w. 8) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12th day of June 2026

( 1, 2 எதிரிகள் ஆஜர் . 3, 4 வது எதிரிகள் ஆஜர் இல்லை எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)).

**முதல் விசாரணை –**

1. நான் தற்போது கம்பாளியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அசா1 நல்லம்மாள் எனது அம்மா. அசா2 சித்ரா எனது தங்கை, அசா3 சந்தியா எனது மகள், அசா7 பெரியசாமி எனது கணவர். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகள் கார்த்திகைசெல்வி, கச்சம்மாள் ஆகியோரையும் தெரியும். எனது அப்பாவிற்கு 2 தாரம். 2வது எதிரி ராக்கு எனது அப்பாவின் 2வது மனைவி ஆவார். எனதுஅப்பாவிற்கு எனது அம்மா மூலம் நானும், எனது சகோதரியும் மகள்களாக உள்ளோம். ராக்குவிற்கு 5 பேர் வாரிசுகள் ஆவார்கள்.

2. எனது அப்பா எங்களுக்கு 2 இடத்தை உழுவதற்காக கொடுத்துவிட்டார். அதனை நாங்கள் விவசாயம் செய்து வந்தோம். கடந்த 6, 7 வருடங்களுக்கு முன்பு முத்துமுருகன் எங்கள் இடத்தை உழுதுவிட்டார். அருகில் உள்ளவர்கள் எங்களிடம் சொன்னவுடன் நானும், எனது அம்மா, எனது தங்கை ஆகிய மூன்று பேரும் வயலுக்கு சென்றோம். அப்போது அங்கு கார்த்திகைசெல்வி, முத்துமுருகன், ராக்கு ஆகியோர் நடவு செய்து கொண்டிருந்தார்கள். நாங்கள் சென்று அவர்களிடம் கேட்டதற்கு முத்துமுருகன் எங்களைப் பார்த்து நீ யாருடி தேவுடியா இங்கு வந்து சொத்து கேட்கிற நீ என்ன எங்க அப்பாவிற்கா பிறந்தாய் என்றும், இலுப்பைகுளத்துக்ககாரர்களிடமும், மைலியை சேர்ந்தவர்களிடம் சென்று சொத்தை கேள் என்று அசிங்கமாக பேசினார்கள். நாங்கள் வயலில் செய்திருந்த நடவினை கலைக்கச் சென்றபோது முத்துமுருகன் முள்கம்பை வைத்து எனது வலது பக்க தலையில் அடித்துவிட்டார். எனது தங்கையை கார்த்திகைச்செல்வி இடது கையில் கடித்து வைத்துவிட்டார். இருவரும் எங்களை அடித்து கீழே தள்ளிவிட்டார்கள். எங்களை வயலுக்கு வந்தால் அடித்தே கொன்றுவிடுவோம் என்று முத்துமுருகன் மிரட்டினார்.

3. எனது கணவர் அவரது வயலுக்கு சென்றிருந்தார். எங்கள் ஊர் ஊராட்சி மன்ற தலைவர் அந்த வழியாக வந்தவர் எனது கணவரிடம் பிரச்சனையை பற்றி சொன்னவுடன் எனது கணவர் வயலுக்கு வந்து எங்களை திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். திருச்சுழி அரசு மருத்துவமனையில் ஒரு நாள் சிகிச்சையில் இருந்தோம். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். மறுநாள் காலை 7.00மணிக்கு முத்துமுருகன், கார்த்திகைசெல்வி, முத்தமிழ், கச்சம்மாள், முத்துச் செல்வி, ராக்கு ஆகியோர் எங்கள் வீட்டிற்கு சென்று எனது மகளையும், எனது

அம்மாவையும் அடித்துள்ளார்கள். எனது அம்மாவை இடது கையில் அருவாளால் வெட்டியுள்ளார்கள். எனது மகளுக்கு நெஞ்சில் மிதித்துள்ளார்கள். அவர்கள் இருவரும் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார்கள். எனது மகள் அங்கு 20 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி–

1. நல்லம்மாள் எனது தாயார் என்றால் சரிதான். சித்ரா எனது தங்கை ஆவார். சந்தியவள்ளி என்ற சந்தியா எனது மூத்தமகள் ஆவார். சங்கீதா எனது இளைய மகள் ஆவார். பெரியசாமி எனது கணவர் என்றால் சரிதான். ஆறுமுகம் எனது கொழுந்தனார் ஆவார். ரத்தினம் எனது அண்ணன். முதல் விசாரணையில் சொன்ன விபரத்தைதான் போலிசார் விசாரணையிலும் சொன்னேனா என்றால் ஆமாம். ஆறுமுகச்சாமி, ரத்தினம் ஆகியோர் எனது குடும்ப உறுப்பினர்கள் கிடையாது என்றால் சரிதான். மேற்படி இருவரையும் விசாரித்தால் உண்மை தெரியவரும் என்றால் சரிதான். ஆறுமுக சாமி சம்பவ இடத்தில் இருந்தார்.

2. சொத்து சம்பந்தமாக எங்களுக்கும் எதிரிகளுக்கும் சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எனதுஅப்பா முறையாக பாகம் பிரித்து, ஆவணம் எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான், வாய்மொழியாக எங்களுக்கு கொடுத்தார். புஞ்சைக்கு ரசீது எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. வயல்காட்டில் சண்டை நடக்கும்போது எங்களையும் எதிரிகளையும் தவிர வேறு யாரும் கிடையாது என்றால் சரிதான். அதன்பிறகு நாங்கள் மருத்துவமனைக்கு சென்றுவிட்டதால் அதன்பிறகு ஊரில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் எனது மகளும், எனது அம்மாவும் ஊரில் இருந்தார்கள். என் மீதும் பெரியசாமி, சித்ரா, சங்கீதவள்ளி, சந்தியா, ஆகியோர் மீதும் நாங்கள்

எதிரிகளை அடித்து தாக்கியதாக 2ம் எதிரி புகார் அளித்ததின் பேரில் எங்கள் மீது நரிக்குடி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. ராக்கு மற்றும் கார்த்திகைச்செல்வியையும் நாங்கள்அடித்ததாக சொல்லி காரியாபட்டிஅரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வயல்காட்டில் சண்டை நடந்து முடிந்தவுடன் நரிக்குடி காவல் நிலையம் முதலில் யார் சென்று புகார் கொடுத்தோம் என்றால் 11.00 மணிக்கு சண்டை நடைபெற்றது, நானும் எனது கணவரும் உடனடியாக சென்று புகார் கொடுத்தோம். 12.00மணி இருக்குமா என்றால் இருக்கும். புகாரினை எழுதிக் கொடுத்தோமா என்றால் வாய்மொழியாக சொன்னோம். நாங்கள் சொன்னவுடன் போலிசார் ஊருக்கு வந்தார்களா என்றால் வரவில்லை. நாங்கள் புகார் கொடுத்தவுடன் போலிசார் எப்போது விசாரிக்க வந்தார்கள் என்றால் வரவில்லை.

4. இவ்வழக்கு சம்பந்தமாக என்னையோ, எங்கள் குடும்பத்தாரையோ போலிசார் விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை.இந்த வழக்கானது நான் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டதா அல்லது எனது அம்மா நல்லம்மாள் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. எனதுஅம்மாவிடம் புகார் மனுவினை யாரை வைத்து எங்கு வைத்து எழுதிக் கொடுத்தார்கள் என்றால் எனது அம்மா திருச்சுழிஅரசு மருத்துவமனையில் இருந்தபோது சார்பு ஆய்வாளர் வந்ததாக சொன்னார்கள். அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் இருந்தபோதும் போலிசார் புகார் பெற்றார்களா என்றால் ஆமாம். நான் எழுதிக் கொடுத்தேனா என்றால் நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதி என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். நான் மருத்துவமனையில் இருந்து 25 நாட்கள் கழித்து விடுவிக்கப்பட்டேன்.

5. எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரணை செய்தால் நான் சிகிச்சையில் இருந்தேன் என்று தெரியவரும் என்றால் சரிதான். சந்தியா எத்தனை நாள் மருத்துவமனையில் இருந்தார் என்றால் 25 நாட்கள் சிகிச்சையில் இருந்தார், அவருக்காக தான் அவருடன் நான் இருந்தேன். எனது மகளிடம் போலிசார் விசாரணை செய்து புகார் வாங்கினார்களா என்றால் இல்லை. என் மகளை போலிசார் பார்க்கவேயில்லை. ஊருக்குள் நடந்த பிரச்சனை சம்பந்தமாக யார் புகார் கொடுத்தார்கள் என்றால் எனது அம்மாவும், மகளும் திருச்சுழி மருத்துவமனையில் வைத்து புகார் கொடுத்தார்கள். போலிசார் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் வைத்து புகார் வாங்கிய பின்னர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

6. பிரச்சனைக்குரிய வயல் சம்பந்தமாகதான் எங்களுக்குள் பிரச்சனை என்றால் சரிதான். எங்களுக்கு சொத்தில் பங்கு உண்டு பாகம் பிரித்து கொடுங்கள் என்று நீதிமன்றத்தில் சிவில் வழக்கு இந்த வழக்கு தாக்கலாவதற்கு முன்பு தாக்கல் செய்தோமா என்றால் செய்தோம். எந்த வருடம் தாக்கல் செய்தோம் என்றால் எனக்கு தெரியாது, எனது கணவருக்குதான் தெரியும். எனது கணவரை விசாரணை செய்தால் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் இருந்தபோது ஊருக்குள் நடந்த சண்டை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வயல்காட்டில் நடந்த சண்டையில் யார் யாரை அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் நான்தான் வயல்காட்டில் இருந்தேன், எங்களுக்குதான் காயம் ஏற்பட்டது. எனது தங்கைக்கு இடது கையில்தான் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். எத்தனை தையல் போடப்பட்டது என்றால் 7 தையல் போடப்பட்டது. நான் சொன்ன மாதிரி, சொன்ன நாள், நேரத்தில் எதிரிகள்

அசிங்கமாக பேசவோ, அடித்து காயப்படுத்தவோ, மிரட்டவோ இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் தான் எதிரிகள் அமைதியான முறையில் விவசாயம் செய்து கொண்டிருந்தார்கள் என்றும், சிவில் வழக்கினை குற்ற வழக்காக மாற்றம் வேண்டும் என்ற எண்ணத்தில் நாங்கள் தான் எதிரிகளை அடித்து மிரட்டி கொடுமைப்படுத்தினோம் என்றால் சரியல்ல. அதனால்தான் எங்கள் மீது எதிரிகள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. சிறு சிறு காயங்களை வைத்து கொண்டு அரசு மருத்துவமனைக்கு சென்று எங்களை அடித்து காயப்படுத்தியதுபோல் ஒரு பொய்யான கதைகளை உருவாக்கி ஒரு பொய் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பொய் புகார் கொடுத்தால் சொத்து எங்களிடம் கொடுத்துவிடுவார்கள் என்ற எண்ணத்தில் அவர்கள் மீது பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.